**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.81/2022

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | கணபதி ராமன் |
| Father's Name | : | வேல்ச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

முதல் விசாரணை:

1. நான் தென்காசி நகராட்சி நிலஅளவையராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் நீதிமன்றத்தில் இருந்துபெறப்பட்ட அழைப்பாணையின்பேரில் அழைப்பாணையின் கோரியுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

3. தென்காசி நகராட்சி வார்டு ஏ, பிளாக் 2, சர்வே எண்.22/1ஏ, 22/1பிக்கான புலவரைபடத்தை ஆஜர் செய்கிறேன். புல வரைபடத்தின் அசலுடன் ஒப்பிடப்பட்ட சான்றிட்ட நகல் சா.சா.ஆ.1 ஆக வா.சா.2 விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

4. தென்காசி நகராட்சி வார்டு ஏ, பிளாக் 2, சர்வே எண்.22/1ஏ, 22/1பிக்கான டவுன் சர்வே பீல்டு ரிஜிஸ்டர் ஆஜர் செய்கிறேன். புல டவுன்

சர்வே பீல்டு ரிஜிஸ்டர் அசலுடன் ஒப்பிடப்பட்ட சான்றிட்ட நகல் சா.சா.ஆ.2 ஆக வா.சா.2 விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

5. சர்வே 22/1 ஆனது என்னவாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 2 உட்பிரிவுகள் 22/1ஏ, 22/1பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

6. சர்வே எண்.22/1ஏ–விற்கு கீழ்புறமோ, வடபுறமோ பாதை எதுவும் செல்கிறதா என்றால் புலவரைபடத்தின்படி பாதை இல்லை.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் வழக்கு சொத்துக்களான 22/1ஏ, 22/1பி சாட்சியம் அளிப்பதற்கு முன் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டுள்ளேன்.

2. சர்வே எண்.22/1ஏவிற்கு கீழ்புறம் 7 மீட்டர் பாதை ஸ்தலத்தில செல்கிறதா என்றால் செல்கிறது, ஆனால் ஆவணங்களில் பாதை இருப்பதாக துலங்காது.

3. அந்த 7 மீட்டர் பாதையானது எதுவரை செல்கிறது என்றால் 22/1பி–யை கடந்து 22/2 வரை செல்கிறது.

4. அந்த 7 மீட்டர் ரோடானது தார்ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.5 வரைபடஅனுமதி தென்காசி நகராட்சியால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் வடபுறத்தில் 7 மீட்டர் நடைபாதை உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது அப்போதைய அதிகாரியால் தரப்பட்டது.

6. மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி